# 2

# தவ்ஹீத், ரிஸாலத், மஆத்

ஆசிரியை:-

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹூ.

மாணவிகள்:-

வஅலைக்குமுஸ்ஸலாம் வரஹ்மதுல்லாஹி வபரகாத்துஹூ.

ஆசிரியை:-

பிள்ளைகளே! நாங்கள் எல்லோரும் முஃமின்கள் அல்லவா? 'முஃமின்' என்றால் யார் என்பதை உங்களில் எவரேனும் சொல்ல முடியுமா?



அர்வா:-



டீச்சர் எனக்குத் தெரியும். எங்கட உம்மா எனக்கு சொல்லித தந்திருக்கிறார். நான் சொல்லவா?

ஆசிரியை:-

சரி சற்று சத்தமாகக் கூறுங்கள் அர்வா.

அர்வா:-

ஆமன்து பில்லாஹ்வில் உள்ளடக்கிய வற்றை விசுவாசித்தவரே'முஃமின்' ஆவார்.

ஆசிரியை:-

சரியாகச் சொன்னீர்கள் அர்வா. பாரகல்லாஹுு லகி (அல்லாஹ் உங்களுக்கு பரகத் செய்வானாக!)

பிள்ளைகளே! அர்வா கூறியது போல் 'ஆமன்து பில்லாஹ்' என்ற தொடரில் அடங்கியுள்ள ஆறு அம்சங்களையும் சந்தேகமில்லாமல் நம்பி விசுவாசித்தவர் தான் 'முஃமின்'. இன்றைய பாடத்தில் அந்த ஆறு அம்சங்களையும் உள்ளடக்கிய மூன்று அடிப்படைகளை சுருக்கமாக நோக்குவோம்.

அமானா:-

டீச்சர்! ஈமானின் ஆறு விடயங்களில் மூன்று விடயங்களை இன்று விரிவாக சொல்லித் தரப்போகிறீர்கள் அப்படித்தானே!

ஆசிரியை:-

இல்லை மகளே! அந்த ஆறு விடயங்களும் இந்த மூன்றிலும் உள்ளடங்கும். அவை தான் தவ்ஹீத், ரிஸாலத், மஆத் என்ற பதங்களாகும்.

ஸைனப்:-

டீச்சர்! அந்த பதங்களின் பொருள் என்ன?

ஆசிரியை:-

தவ்ஹீத் என்றால் ஏகத்துவம், ரிஸாலத் என்றால் தூதுத்துவம், மஆத் என்றால் மீண்டும் எழுப்பப்படும் மறுமை என்பது பொருள்.

ஷைமா:-

இவற்றின் பொருள்களை இன்னும் விளக்கமாக சொல்லித் தருவீர்களா?

ஆசிரியை:-

நல்லது ஷைமா! அல்லாஹ் தான் எம்மைப் படைத்தான். அவன் ஒருவன். அவன் மாத்திரம் தான் வணங்கப்படவும் உதவி தேடப்படவும் தகுதியானவன். அவன் நிகரற்றவன். அவனுக்கு இணை துணை கிடையாது, எந்த தேவையும் அற்றவன், எந்தவொன்றையும் ஹலால் - ஹராம் ஆக்கும் உரிமை அவனுக்கு மட்டுமே உரிய அதிகாரமாகும். நன்மை - தீமை அனைத்தும் அவனிடமிருந்தே கிட்டுகின்றன. இவ்வாறு விசுவாசிப்பதே தவ்ஹீத் (ஏகத்துவம்) ஆகும்.

அர்வா:-

தவ்ஹீதின் எதிர்ப்பதம் 'ஷிர்க்' என்பதாக எங்களது உம்மா சொன்னார். அதன் பொருள் இணைவைப்பது என்பது தானே டீச்சர்!

ஆசிரியை:-

ஆம்! அப்படியே தான் அதனால் தான் இறைவனுக்கு இணைவைப்பவர்கள் 'முஷ்ரிகுகள்' என அழைக்கப்படுகின்றனர். சரி இனி நாங்கள் ரிஸாலத் எனப்படும் தூதுத்துவம் பற்றிப் பார்ப்போம். மனிதனைப் படைத்த அல்லாஹ் அவன் உலகில் எவ்வாறு வாழ வேண்டும் என்பதற்கும் வழிகாட்டினான்.

அல்லாஹ்வின் வழிக்காட்டல்களை உள்ளடக்கியவையே வேதங்கள் ஆகும். இந்த வேதங்களை போதிப்பதற்காக மனிதர்களுக்கு மத்தியில் நல்லவர்களையும் பொருத்தமானவர்களையும் அல்லாஹ் தெரிவு செய்தான். அவர்களையே நபிமார்கள் என அழைக்கின்றோம். அவர்களுக்கு மத்தியில் விசேடமானவர்கள் ரஸூல்மார்கள் என அழைக்கப்படுகின்றனர்.

பிள்ளைகளே! மலக்குகளில் மிகவும் முதன்மையானவர் ஜிப்ரீல் (அலை) ஆவார். இவருக்கூடாகவே அல்லாஹ் வேதங்களையும் ஸுஹுபுகளையும்

நபிமார்களுக்கு அனுப்பி வைத்தான். இதனையே நாம் ரிஸாலத் (தூதுத்துவம்) என அழைக்கிறோம்.

அர்வா:-

டீச்சர்! ஜிப்ரீல் (அலை) நபிமார்களுக்கு வஹீ கொண்டுவருவதாக உம்மா சொன்னார். இதனைத்தானே நீங்கள் ரிஸாலத் என்று கூறுகிறீர்கள்.

ஆசிரியை:-

மாஷாஅல்லாஹ் அர்வா! நீங்கள் சொன்னது சரி. உங்களது உம்மா உங்களுக்கு நிறைய மார்க்க விடயங்களை சொல்லித் தருகிறார் என்பது விளங்குகின்றது. பிள்ளைகளே! நீங்களும் அர்வாவைப்போல மார்க்க விடயங்களை பெற்றோர்களிடம் கேட்டும், நூல்களை வாசித்தும் அறிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும். அன்புச் செல்வங்களே! நீங்கள் அவ்வாறு செய்வீர்கள் தானே?

மாணவிகள்:-

இன்ஷா அல்லாஹ் டீச்சர். நிச்சயம் நாங்கள் செய்வோம்.

ஆசிரியை:-

பிள்ளைகளே! இனி மஆத் எனப்படும் மறுமை நம்பிக்கை பற்றிப் பார்ப்போம். மனிதன் மரணிப்பதோடு அவனது வாழ்க்கை முடிவடைந்து விடுவதில்லை. கப்ரில் மனிதர்கள் மீண்டும் உயிரூட்டப்படுவார்கள். அவர்கள் முன்கர் - நகீர் எனும் மலக்குகளால் விசாரிக்கப்படுவார்கள். விசாரணையின் பின்னர் கப்று வாழ்க்கை சுவர்க்கத்தின் பூங்காவாக அமையும். அல்லது நரகின் கிடங்காக அமையும்.

இல்மா :-

டீச்சர்! இரண்டாவது ஸூர் ஊதப்பட்டதும் மக்கள் மஹ்ஷர் மைதானத்தில் ஒன்று கூட்டப்படுவார்கள் என ரஸானா ஆசிரியை கூறினார். அது கப்றுடைய வாழ்க்கையின் பின்னர்தானே?

ஆசிரியை :-

ஆமாம். முதல் ஸூர் ஊதப்பட்டதும் உலகின் அழிவு ஏற்படும். அனைத்து உயிரினங்களும் மரணித்துவிடும். குறிப்பிட்ட காலத்தில்

இரண்டாம் ஸூர் ஊதப்பட மரணித்தவர்கள் உயிர்பெற்று எழுவார்கள். அவர்கள் மஹ்ஷர் எனும் வெளியில் ஒன்று கூட்டப்படுவார்கள். பின்னர் பகிரங்க விசாரணை நடைபெறும். நன்மை செய்தோர் சுவனம் செல்வார்கள். தீமை செய்தோர் நரகம் போவார்கள். இவை அனைத்தையும் உள்ளடக்கியதையே மஆத் என்கிறோம். இப்போது தவ்ஹீத், ரிஸாலத், மஆத் என்ற பதங்களின் பொருளை நீங்கள் தெளிவாக அறிந்திருப்பீர்கள். இன்ஷா அல்லாஹ் அடுத்த பாடத்தில் சந்திப்போம்!

மாணவிகள்:-

ஜஸாகல்லாஹு ஹைரன்

## பயிற்சி

1. பின்வரும் அறபுச் சொற்களின் பொருளைக் குறிப்பிடுக.

   (அ) தவ்ஹீத்

   (ஆ) முஃமின்

   (இ) ஆமன்து பில்லாஹ்

   (உ) ரிஸாலத்

   (ஊ) மஆத்

2. அல்லாஹ்வைப் பற்றி நீங்கள் எவ்வாறு விசுவாசிக்கின்றீர்கள்?

3. ரஸூல்மார்கள் எனப்படுவோர் யாவர்?

4. ஸூர் ஊதப்பட்டதும் நிகழ்வன யாவை?

5. பின்வரும் மலக்குகளின் பணியைக் குறிப்பிடுக

   அ) ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம்

   ஆ) முன்கர் - நகீர் அலைஹிமஸ்ஸலாம்